தினமலர்
உண்மையின் உரைகல்
உலக தமிழர் செய்திகள்
மார்ச் 27,2014 IST

# சிங்கப்பூரில் ஒற்றுமை பறைசாற்றும் குடும்பதின நிகழ்ச்சி




சிங்கப்பூர்: திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), "சமய நல்லிணக்க குடும்பதின நிகழ்ச்சி" ஒன்றை, சிங்கப்பூர் கிழக்கு கடற்கரை பூங்காவில் நடத்தியது.
சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் சங்கத் தலைவர், நசீர் கனி, சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழக மருத்துவமனை மருத்துவ நிபுணர் வனஜா கலைச்செல்வன், பெண்களுக்கான மருத்துவ சொற்பொழிவும், கேள்வி பதில் அரங்கமும் நடத்தினார்.
ஒற்றுமையைப் பறைசாற்றும் வகையிலும், சமய நல்லிணக்கத்தை மேம்படுத்தி ஒன்றுபட்ட சமுதாயமாக வாழ்வதன் அவசியத்தை வலியுறுத்தியும் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில், மாணவ மாணவிகளுக்கான பல்வேறு போட்டிகள் இடம்பெற்றன.
"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட இக்குடும்பத்தின நிகழ்ச்சியில், சுமார் 300 பேர் கலந்து சிறப்பித்தனர்.
– சிங்கப்பூரிலிருந்து முஹியத்தீன் அப்துல் காதர்,தலைவர், ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம்